# நாட்டுப்புறக் கைவினைக்கலைகள்

வினா விடை

1.மண்பாண்டங்கள் எங்கெங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

சிந்துசமவெளி அகழாய்வில் பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.

நாகை மாவட்டம் செம்பியன் கண்டியூரில் கலையழகு மிகுந்த மண்கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் ஏராளமான சுடுமண் பொருள்கள் கிடைத்துள்ளன.

2. மண்பாண்டம் செய்யும் முறை குறிப்பு எழுதுக.

பள்ளம் தோண்டி அதில் களிமண்ணை நிரப்ப வேண்டும். அதில் தண்ணீர் ஊற்றி ஒரு நாள் முழுவதும் ஊறவைக்க வேண்டும். பின்பு அதனுடன் குறிப்பிட்ட அளவில் மெல்லிய மணல், சாம்பலைக் கலந்து பக்குவப்படுத்த வேண்டும். பானை செய்யும் சக்கரத்தைத் திருவை என்பர். திருவையை வேகமாகச் சுழலச் செய்து அதன் நடுவில் மண்ணை வைத்துக் கையால் அணைத்துப் பிடித்து மண்பாண்டங்களை உருவாக்குவர். உரிய வடிவம் வந்ததும் அடிப்பகுதியில் நூல் அல்லது ஊசியால் எடுத்துக் காயவைப்பர்.

3. சுடுமண் சிற்பங்கள் குறிப்பு எழுதுக.

மண்பாண்டங்களைப் போன்றே களிமண்ணால் செய்யப்பட்டுச் சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை சுடுமண் சிறபங்கள் ஆகும். பெரிய மாளிகைகளிலும், கலையரங்குகளிலும் சுடுமண் சிற்பங்களை அழகுக்காக வைத்திருப்பார்கள். முன்பெல்லாம் சிற்றூர்களில் உள்ள கோயில்களில் மட்டுமே இவற்றைக் காண முடியும். இப்போது கலைப்பொருளாக அழகுக்காகப் பல இடங்களிலும் பயன்படுத்துகின்றனர்.

4. மூங்கிலால் செயப்படும் பொருள்கள் யாவை?

மட்டக்கூடை, தட்டுக்கூடை கொட்டுக்கூடை, முறம், ஏணி, சுதுரத்தட்டி, கூரைத்தட்டி, தெருக்கூட்டும் துடைப்பம், மாடுகளுக்கான மூஞ்சிப்பெட்டி, பழக்கூடை, பூக்கூடை, பூத்தட்டு, கட்டில், புல்லாங்குழல், புட்டுக்குழாய், கால்நடைகளுக்கு மருந்து புகட்டும் குழாய் என எத்தனையோ பொருள்கள் மூங்கில் மூலம் செய்யலாம்.

5.பாய்களின் வகைகளை எழுதுக.

பாய்களில் பலவகை உண்டு. குழந்தைகளைப் படுக்க வைப்பது தடுக்குப்பாய். உட்கார்ந்து உண்ண உதவுவது பந்திப்பாய். உட்காரவும், படுக்கவும் பயன்படுத்துவது திண்ணைப்பாய். திருமணத்துக்குப் பயன்படுத்துவது பட்டுப்பாய். இசுவாமியர் தொழுகைக்கு உதவுவது தொழுகைப்பாய். இப்படிப் பலவகைப் பாய்கள் உண்டு.

6. பனையோலையால் செய்யப்படும் பொருள்கள் யாவை?

குழந்தைகளுக்கான கிலுகிலுப்பை, பொம்மைகள், பொருள்களை வைத்துக்கொள்ள உதவும் சிறிய கொட்டான், பெரிய கூடை, சுளகு, விசிறி, தொப்பி, ஓலைப்பாய் எல்லாம் பனையோலையால் செய்யப்படும் பொருள்கள் ஆகும்.

7. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறு.

முதலில் பிரம்பினை நெருப்பினில் காட்டிச் சூடுபடுத்துவர். சூடான பிரம்பினை நட்டுவைத்திருக்கும் இரண்டு கடப்பாரைகளுக்கு இடையே செலுத்தி வளைப்பர். அது வேண்டிய வடிவத்தில் கம்பிபோல வளையும். பின்னர் அதனைத் தண்ணீரில் நனைத்து வைத்துவிட்டால் அப்படியே நிலைத்துவிடும். பிறகு அவற்றை இணைத்துச் சிறு பிரம்பு ஆணிகளை அறைந்தும், சிறு பிரம்பு இழைகளைக் கொண்டு கட்டியும் தேவையான பொருள்களாக மாற்றுவர்.